# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 249/மா/2023**
**நாள் : 03.10.2023**

திரு. என். சேகர்,
சென்னை- 600 076. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொரட்டூர், சிவலிங்கபுரம் குடியிருப்போர் நல சங்கம், C-பிளாக், கதவு எண்.77/11 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. என். சேகர் என்பவரின் 02.08.2023 நாளிட்ட மனு 03.08.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 249/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொரட்டூர், சிவலிங்கபுரம் குடியிருப்போர் நல சங்கம், C-பிளாக், கதவு எண்.77/11 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. என். சேகர் என்பவரின்முறையீட்டு மனுவில்,

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது வீடு ஒட்டிய நிலத்தில் குடியிருப்பு பகுதியில் விநாயகா மாவு மில் அரவை நிலையம் உரிமையாளர் திரு. பூபதி என்பவர் முறைகேடாக பில்டிங் பிளான் அப்ரூவல் இல்லாமல் பிற அரசு அலுவலரிடம் இருந்து தடையில்லா சான்றிதழ் பெறாமல், பொது மக்களுக்கும், பக்கத்து வீட்டிற்கும் அதிக சத்தம் ஒலி எழுப்பி நில அதிர்வு, தோல் அரிப்பு, உடல் உபாதைகள், தூக்கமின்றி சோர்வு ஏற்படுத்தி கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இயக்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து பலமுறை சென்னை பெருநகர மாநகராட்சி, அம்பத்தூர், மண்டலம்-7 சென்னை-53, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அம்பத்தூர் சென்னை–58, தமிழ்நாடு மின்வாரியம் 3வது பிரதான சாலை அம்பத்தூர் தொழிற்பேட்டை சென்னை-58-ல் உள்ள முகவரிக்கு பதிவு அஞ்சல் வழியாக புகார் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளிக்கப்பட்ட பின்பும், உயர்நீதிமன்றம்

22.8.2019 நாளில் உத்தரவு பெறப்பட்ட பின்பும், மீண்டும் அதே போல் பொதுமக்களுக்கு இடையூறாகவும் அக்கம் பக்கம் உள்ள வீட்டிற்கு உடல் உபாதைகள் ஏற்படும் வகையில் தொந்தரவு செய்வதை தொடர்ந்து குடியிருப்பு பகுதியில் இயங்கி வரும் விநாயகா மாவுமில் அரவை நிலையம், தொழிற்சாலைக்கு உட்பட்ட பகுதியில் மாற்றுவதற்கு புகார் அளித்து, தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் யாரும் செவி சாய்க்காமல், நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதை கண்டு மிகவும் வருந்துகிறேன்.

எனினும், சமீபத்தில் செய்தி வாயிலாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், உதவி பதிவாளர் அவர்களிடம் முறையிட்டால் நடுநிலையுடன் நல்ல தீர்ப்பு வழிவகை கிடைக்கும் என நம்பி தங்களிடம் பார்வையில் குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களையும் நகலுடன் ஈர்ப்பு கவனத்துடன் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

எனவே நேர்மை, துணிவு, கடமை மிகுந்த உதவிப் பதிவாளர் அவர்கள் உடனடியாக இப்புகாரை தொடர்ந்து நேரடியாக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க தவறிய மாநகராட்சி ஊழியர்கள் மீது பணி பொருந்தும் வகையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நிரந்தரமாக பணி நீக்கம் செய்ய உத்தரவு வழங்க வேண்டுகிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி (மண்டலம் – 7) மண்டல அலுவலரிடம் 24.8.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக அறிக்கை கோரப்பட்டது. விசாரணை நாள்: 5.9.2023 வரை அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.**

**2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 5.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 5.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் :**

> "நான் வசித்து வரும் சென்னை, கொரட்டூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் விநாயகா மாவுமில் என்கின்ற அரவை நிலையம் இயங்கி வருகிறது. மேற்கண்ட மாவு அரவை நிலையத்தில் இயந்திரங்கள் இயக்கப்படும்போது அங்கு ஏற்படும் சத்தம் மற்றும் அதிர்வலையால் பக்கத்தில் உள்ள எங்களது வீடு பெரிதும் பாதிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட அரவை நிலையம் எவ்வித அங்கீகாரம் பெறாமலும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்றவற்றில் தடையின்மை சான்று பெறாமல் நடைபெற்று வருகிறது. அரவை நிலையத்தில் அரைக்கப்படும் மாவு போன்றவற்றால் எங்களது வீடு தூசியால் நிரம்பி பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பாக எங்களால் தொடரப்பட்ட வழக்கின் மீதான (W.P. No. 9250/2018) 22.8.2019 நாளிட்ட ஆணையில் மேற்கண்ட விநாயகா மாவு அரவை நிலையத்தை பூட்டி சீலிட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையொட்டி, மாவு மில் அரவை நிலையம் பூட்டி சீலிடப்பட்டது. ஆனால், பூட்டி சீலிடப்பட்ட மேற்கண்ட கடை சென்னை உயர்நீதி மன்ற உத்தரவையும் மீறி மீண்டும் திறக்கப்பட்டு மேற்கண்ட அரவை நிலையம் இயங்கி வருகிறது.

மேற்கண்ட அரவை மில்லால் நாங்கள் மட்டும் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அருகில் உள்ள குடியிருப்புவாசிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மேற்கண்ட சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின்படி பூட்டி சீலிடப்பட்டு, பின்னர் உத்தரவை மீறி திறக்கப்பட்டு வரும் விநாயகா மாவு மில் அரவை நிலையத்தை மீண்டும் பூட்டி சீலிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 7ன் உரிமம் ஆய்வாளர் அவர்கள் 5.9.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7, சிவலிங்கபுரம், அக்ரஹாரம், வடக்கு இரயில்வே ஸ்டேசன் ரோடில் அமைந்துள்ள விநாயகா மாவு மில் என்கின்ற அரவை நிலையத்தை திரு. எஸ். பூபதி என்பவர் நடத்தி வந்தார். உரிமம் பெறாமல் இயங்கி வந்த மேற்கண்ட அரவை நிலையத்திற்கு சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின்படி தாக்கீது வழங்கப்பட்டது. மேலும் மேற்கண்ட அரவை நிலையத்தால் தனக்கு பாதிப்பு ஏற்படுகிறது எனக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. சேகர் அவர்களால் வழக்கு தொடரப்பட்டு (W.P. No.9250/2018) அவ்வழக்கின் மீதான 22.8.2019 நாளிட்ட தீர்ப்பில் மற்றவற்றுடன் கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

xxxx

xxxx

Inasmuch as the premises has been sealed, there is no need to issue a mandamus, as prayed for, to consider the representation of the petitioner dated 19.9.2016. Respondent No. 4 is stated to have submitted an application for grant of license. It is open to respondent No. 4 to take recourse under law.

மேற்கண்ட அரவை நிலையம் வட்டார இணை ஆணையர் அவர்களின் ஆணை நாள் 29.12.2021ன்படி திறக்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட அரவை நிலையம் குறித்து விநாயகா மாவு மில் அரவை நிலைய உரிமையாளருக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அனுப்பியுள்ள 30.4.2021 நாளிட்ட கடிதத்தில் "மேற்கண்ட அரவை நிலையம் அமைந்துள்ள இடம் குடியிருப்புப் பகுதியில் உள்ளது எனவும், எனவே குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு உள்ளாட்சி அமைப்பு மட்டுமே அனுமதி வழங்க இயலும் " என விநாயகா அரவை நிலைய உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மேற்கண்ட அரவை

நிலையத்தின் உரிமம் 2021ல் புதுப்பிக்கப்பட்டு, அரவை நிலையம் தற்போதும் இயங்கி வருகிறது என்பதை இம் முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட விநாயகா மாவு மில் இயங்கி வரும் இடத்தில் உள்ள 145 குடியிருப்புவாசிகள் தங்களுக்கு தங்கள் பகுதியில் மேற்கண்ட மாவு மில் இயங்கிட வேண்டும் என மாநகராட்சிக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர் என தெரிவித்து, அவர்கள் அனுப்பியுள்ள மனுவின் நகல் இம்முறை மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 7ன் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் (ம) ஆவண நகல்கள் ஆகியவை இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன :**

சென்னை கொரட்டூரை சேர்ந்த திரு என். சேகர் என்பவர் தங்கள் பகுதியில் அதிக ஒலி எழுப்பி உடல் ரீதியான தோல் அரிப்பு ஏற்படுத்தி வரும் விநாயகா மாவுமில் அரவை நிலையம் செயல்பட்டு வருவதாகவும், மேற்கண்ட அரவை நிலையத்தால் பொதுமக்கள் மிகவும் உடல் ரீதியாக பாதிக்கப்படுவதாகவும், அதனை அகற்றிட வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–7 அலுவலகத்தில் மனு அளித்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும், அதனால் அந்த மாவுமில்லை அகற்றிடவும், நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் -7ன் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

(1) இந்நேர்வில் மனுதாரர் திரு. சேகர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில், 9/76, சிவலிங்கபுரம், அகரஹாரம், வடக்கு ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர், சென்னை – 76 என்ற விலாசத்தில் இயங்கிவரும் விநாயகா மாவு அரைவு மில்லை அகற்றுமாறு அளிக்கப்பட்ட 19.9.2016 நாளிட்ட மனுவினை பரிசீலனை செய்யுமாறு தொடர்ந்த W.P. எண். 9250 of 2018ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது, முதலாவது பிரதிவாதி, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரண்டாவது பிரதிவாதியான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7ன் உதவி ஆணையர் ஆகியோர், மேற்கண்ட அரவை நிலையம் உரிமம் இல்லாமல் இயங்கி வருவதாகவும், பிரிவு 379-A சென்னை மாநகராட்சி சட்டம், 1919ன்படி சீல் வைக்கப்பட்டது என்று சமர்ப்பித்ததை ஏற்றுகொண்டு, பின்வருமாறு ஆணையிட்டுள்ளது.

"12. Inasmuch as the premises has been sealed, there is no need to issue a mandamus, as prayed for, to consider the representation of the petitioner dated 19.9.2016. Respondent No.4, is stated to have submitted an application for grant of licence. It is open to respendent No.4, to take recourse under law."

(2) திரு. எஸ். பூபதி என்பவர் விநாயகா அரவை மில்லை இயக்க அனுமதியளிக்குமாறும் மற்றும் சீல்வைக்கப்பட்டதை அகற்றக்கோரி தாக்கல் செய்த W.P.No. 14136 of 2020 மற்றும்

W.M.P. No. 17573 of 2020யில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 8.10.2020 நாளிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது:-

> "5. Taking into consideration the facts and circumstances of the case and also the limited relief sought for in this Writ Petition, there shall be a direction to the second and third respondents to consider the representation made by the petitioner on 31.08.2019 and take a decision strictly in accordance with law within a period of four weeks from the date of receipt of a copy of this order. The petitioner is directed to make a fresh representation to the second and third respondents along with all the relevant documents and a copy of this order."

(3) உதவி சட்ட அலுவலர் RDC (Central) (Legal Cell) தனது 5.2.2021 நாளிட்ட குறிப்பில் சிவலிங்கபுரம் குடியிருப்போர் நலச் சங்கம் (ம) திரு. சேகர் என்பவர் அளித்த மனுவின் அடிப்படையில், அரவை நிலைய தொழில் நிறுவனத்தை நடத்த உரிமம் வழங்கும் கோரிக்கை 18.12.2020 நாளிட்ட ஆணையில் நிராகரிக்கப்பட்டது என்றும் இதனை எதிர்த்து திரு. எஸ். பூபதி என்பவர் வட்டார துணை ஆணையருக்கு 12.1.2021 அன்று சமர்ப்பித்த மனுவில் தனக்கு எதிராக சிவலிங்கபுரம் குடியிருப்போர் நல சங்கம் யாரும் மனு ஏதும் தரவில்லையென்றும் திரு. எஸ் சேகர் என்பவர் காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் அளித்துள்ளார் என்றும், திரு. எஸ். பூபதி என்பவர் அளித்துள்ள மனுவின் மீது நடைமுறையில் உள்ள விதிகளின்படி existing norms in force பரிசீலிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

(4) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ன் மண்டல நல அலுவலர் அம்பத்தூர் உதவி வருவாய் அலுவலருக்கு அனுப்பியுள்ள 12.7.2021 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட விநாயகா மாவு மில் ஆய்வு செய்யப்பட்டதில், விநாயகா அரவை நிலையத்தால் **"ஒலி மாசு"** ஏற்படுகிறது என தெரியவருகிறது என்றும் எனவே தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து உரிமம் அனுமதிக்கப்படுமாயின் சான்றிதழ் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

(5) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ன் மண்டல அலுவலர், மனுதாரருக்கு 6.9.2021 நாளிட்ட கடிதத்தில் அரவை நிலையம் அமைந்துள்ள இடம் பெருநகர சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தின்படி குடியிருப்புப் பகுதி எல்லைக்குள் வருகிறது என்று தெரிவித்து அரவை நிலையத்திலிருந்து **"ஒலி மாசு"** ஏற்படுகிறது என்றும் மேற்படி அரவை நிலையம் அமைந்துள்ள இடம் "Primary Residential Zone" என தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், உரிமம் வழங்குவதற்கு உண்டான சாத்தியகூறுகள் இல்லாத நிலையில் மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6) மேலும் 29.12.2021, நாளிட்ட வட்டார துணை ஆணையருக்கு அனுப்பியுள்ள அலுவலக குறிப்பில் புதிய உரிமம் வழங்க முடியாத சூழ்நிலையில் தனியர் தன் தகப்பனார் 30 வருடங்களாக மேற்படி இடத்தில் அரவை நிலையம் நடத்தி வருவதாக தெரிவித்துள்ள நிலையில் இதன் தொடர்பாக தாங்கள் ஏற்கனவே 02.05.2015 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அரவை நிலையத்தை புதுப்பிக்க ரூ.1500/- காசோலை ரசீதின் நகலை இணைத்து அரவை நிலையத்தை மேற்கொண்டு இயக்க அதிலிருந்து புதுப்பித்து தருமாறு அரவை நிலையம் உரிமையாளர் திரு. எஸ். பூபதி அவர்கள் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களுக்கு 20.09.2021 நாளிட்ட தேதியில் மனு கொடுத்துள்ளார் என்றும் திரு. எஸ். பூபதி, விநாயகா அரவை நிலையம், கதவு எண்.9/76, சிவலிங்கபுரம், கொரட்டூர், சென்னை-76 விண்ணப்ப எண்.TLNT/2015-16/67769 என்ற எண்கள் பதிவாகியுள்ளது என்றும், எனவே, 2015–16 முதல் 2021–2022 வரை உரிமத்தை புதுப்பிக்கவும் கணினியில் பதிவேற்றம் செய்திடவும் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

(7) சென்னை மாசு கட்டுபாடு வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ன் மண்டல அலுவலருக்கு 4.1.2023 நாளிட்டு அனுப்பிய கடிதத்தில், மனுவில் குறிப்பிட்ட அரவை மில்லை ஆய்வு செய்ததில், அந்த அரவை மில் குடியிருப்பு பகுதியில் உள்ளதாகவும், குடிசைத் தொழில் என்ற அளவில் இயங்குவதால் Local Body Act-ன் கீழ் நடவடிக்கை எடுத்து மனுதாருக்கு தெரியப்படுத்துமாறு தெரிவித்துள்ளது.

(8) 29.12.2021 நாளிட்ட வட்டார துணை ஆணையருக்கு அனுப்பியுள்ள குறிப்பின் அடிப்படையில் மனுதாரர் திரு. எஸ். பூபதி என்பவருக்கு 3.2.2023 நாளிட்ட ஆணையில் 31.3.2024 வரை உரிமம் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(9) பெருநகர சென்னை மாநகராட்சியின், சுகாதார துறையின் மண்டல நல அலுவலர் மேற்கண்ட விலாசத்தில் உள்ள அரவை நிலையத்திலிருந்து "ஒலி மாசு" ஏற்படுகிறது என்றும், மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் செயற்பொறியாளர் அவர்கள் மேற்கண்ட விலாசத்தில் உள்ள இடம் "Primary Residential Zone" என குறிப்பிட்டுள்ள நிலையில், விநாயகா அரவை நிலையம் இயங்க உரிமம் வழங்குவதற்கு உண்டான சாத்திய கூறுகள் இல்லாத நிலையில், உரிமம் தொடர்பான விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது என தெரிவித்த நிலையில், 2015-2016 முதல் 2021-2022 வரை எந்த அடிப்படையில் உரிமம் புதுப்பிக்கப்பட்டது, அதாவது மாண்பமை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியவாறு சட்ட விதிகளுக்கு உட்பட்டு (Strictly in accordance with law) வழங்கப்பட்டதா என்பதில் முரண்பாடு உள்ளதாக இம்முறைமன்றம் கருதுகிறது.

(10) 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 12 (d)ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

பிரிவு: 12 (a) x x x x

(b) x x x x

(c) x x x x

(d) வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு பிற தேவையான தீர்வு நடவடிக்கைகளுக்கு ஆணையிடலாம்."

மேற்கண்ட சட்டப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பத்திகள் 4,5,6,7,8&9ன் மீது தக்க கவனம் செலுத்தி கதவு எண்.9/76, சிவலிங்கபுரம், அக்ரஹாரம், வடக்கு ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர், சென்னை–76 என்ற முகவரியில் இயங்கி வரும் விநாயகா அரவை நிலையத்தின் உரிமத்தினை புதுப்பித்தது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. என். சேகர்,
   கதவு எண்.77/11, C- பிளாக்,
   சிவலிங்கபுரம் குடியிருப்போர் நல சங்கம்,
   கொரட்டூர், சென்னை – 600 076.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003..
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 7, பெருநகர சென்னை மாநகராட்சி,
   536, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   அம்பத்தூர், சென்னை - 600 053.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை /
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்